[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2021 ஆகஸ்ட் 24

விளைபொருட்கள் உற்பத்தி மற்றும் பயன்பாடு, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளைத் திட்டமிட்டு, ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள் (Integrated Farming Clusters)உருவாக்கப்பட்டு தொகுப்பு ஒன்றுக்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 185 ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள் மொத்தம் 37 கோடி ரூபாய் மானியத்தில் உருவாக்கப்படும்.

19. 5,000 மகளிர் விவசாயிகளை உள்ளடக்கிய 50 இயற்கை பண்ணைத் தொகுப்புகள் உருவாக்கப்படும்

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும்வண்ணம், இயற்கை உரம் மற்றும் பயிர்ப் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, இயற்கை உணவுப் பொருட்களை உற்பத்தி செய்திட 50 இயற்கை பண்ணைத் தொகுப்புகள் அமைக்க ஒரு தொகுப்புக்கு 6 இலட்சம் ரூபாய் வீதம் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

20. மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தினை உறுதி செய்ய இரண்டு இலட்சம் ஊட்டச்சத்துத் தோட்டங்கள் அமைக்க 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

இரண்டு இலட்சம் மகளிர் மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்தை உறுதி செய்திடவும், இரத்த சோகை குறைபாடுகளைச் சரி செய்திடவும், மகளிர் குழு உறுப்பினர்களின் வீட்டின் பின்புறத்தில் ஊட்டச்சத்துத் தோட்டம் அமைத்து இத்தோட்டத்தில், இயற்கை முறையில் பலன் தரும் சத்தான கீரைகள், முருங்கை, பப்பாளி, கொய்யா, சப்போட்டா போன்ற பழ மரக்கன்றுகள் வளர்க்க 1 கோடி ரூபாய் நிதி மானியமாக வழங்கப்படும்.

21. உள்ளூர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு மிக முக்கியத் தேவையாகக் கருதப்படும் பொது உட்கட்டமைப்பு வசதிகளைக்கொண்ட வாழ்வாதாரப் பூங்காக்கள் உருவாக்கப்படும்

சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடத் தேவையான பொது இடங்கள், கட்டடங்கள் மற்றும் கருவிகள்/உபகரணங்கள் போன்றவை தேவையின் அடிப்படையில் பிற துறைகளின் ஒருங்கிணைப்புகள் மூலமாக கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும். இப்பூங்காக்கள்மூலம் உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கைகளான இட வசதி, சேமிப்பு

2021 ஆகஸ்ட் 24] [திரு. கே.ஆர். பெரியகருப்பன்]

வசதி மற்றும் விற்பனைக்கு இணக்கமான சூழ்நிலை போன்றவை உருவாக்கப்படும்.

22. இயற்கை வளங்கள் மற்றும் பல்லுயிர் பன்மத்தைப் பேணிக் காக்கவும் உள்ளூர் சுய உதவிக் குழு பெண்களுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்

நமது அன்றாடத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றிற்கு நாம் பல்லுயிர் காரணிகளைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது. பல்லுயிர் பன்மம் (Biodiversity) எனக் குறிப்பிடக்கூடிய இக்காரணிகளைப் பேணிப் பாதுகாப்பது நமது முதற்கண் கடமையாகும்.

பல்லுயிர் பன்மம் மற்றும் இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் அனைத்து ஊராட்சிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு இதன் முக்கியத்துவத்தை விளக்கி பல்லுயிர் பன்மப் பதிவேட்டை (Resource Inventory Register) பராமரிக்க திறன் மேம்பாட்டுப் பயிற்சி 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

23. கிராமப்புற மற்றும் நகர்ப்புரங்களில் உள்ள 25,000 இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளித்திடவும், தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்குத் தேவையான திறன் பயிற்சிகள் அளித்திடவும், 87.80 கோடி ரூபாய் வழங்கப்படும்

கிராமப்புரங்களில் நலிவடைந்த குடும்பத்தைச் சேர்ந்த 18 வயது முதல் 35 வயது வரை உள்ள ஏழை இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திட தீனதயாள் உபாத்யாயா கிராமப்புர இளைஞர்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 10,000 இளைஞர்களுக்கு 60 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் வாயிலாக 10,000 கிராமப்புர இளைஞர்களுக்கு 10 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்கீழ் 16.50 கோடி ரூபாய் செலவில் 5,000 நகர்ப்புர இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும்பொருட்டு, 130 வேலைவாய்ப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் 1.30 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

2021 ஆகஸ்ட் 24] [திரு. கே.ஆர். பெரியகருப்பன்]

உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இக்குழுக்களுக்குத் தரமான உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கவும், நவீன முறையில் பொட்டலமிடுதல் (Packaging) மற்றும் தனி முத்திரை பெறவும் வழிவகை செய்யப்படும்.

மாநில, மாவட்ட அளவிலான வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களை நவீனப்படுத்தி, புதுப்பொலிவு பெற்ற விற்பனையகங்களாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கு 1 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும். மின்னணு இணைய வர்த்தகம்மூலம் மகளிர் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை அதிகரிக்க மாநில அளவிலான வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

27. சிறப்பாகச் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு 'மணிமேகலை விருதுகள்' வழங்கப்படும்

மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாகச் செயல்பட்டுவரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புரப் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 'மணிமேகலை விருதுகள்' வழங்கிட 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

28. வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட விவரங்கள் பெறுவதற்கு பிரத்தியேக தொலைபேசி உதவி சேவை மையம் துவக்கப்படும்

ஊரக மற்றும் நகர்ப்புர இளைஞர்களுக்கு வாழ்வாதாரம் தொடர்பான வாய்ப்புகள், நலத் திட்டங்கள், நிதி உதவிகள் குறித்த தகவல்கள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற பிரத்தியேக தொலைபேசி உதவி சேவை மையம் துவக்கப்படும்.

பிற்பகல் 1–50

ஏற்கெனவே பழைய சமத்துவபுரங்களிலுள்ள வீடுகளில், குடிநீர்க் கட்டமைப்பு, தெருவிளக்கு போன்ற சீரமைப்புப் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்ற நல் அறிவிப்பையும் நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்தி இவை அனைத்தையும் எதிர்காலத்தில், நிறைவேற்றித் தருவேன் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய